## பொள்ளாச்சி நகராட்சி

## 31.08.2020 அன்று நடைபெற்ற சாதாரணக் கூட்ட தீர்மானம்

**2372)** பொள்ளாச்சி நகராட்சி பொது சுகதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு இயக்கப்பட்டு வரும் வாகனம் எண்.TN.41 AH 2032 (டிப்பர்) வாகனத்திற்கு பழுது நீக்கம் செய்து தகுதிச் சான்று பெறும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/—திற்கும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.2140/2020/எச்2**

**2373)** பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இயக்கப்படும் வாகன எண்.TN 41 AH 2032 வாகனத்திற்கு பழுது பார்த்தல் மற்றும் தகுதிச்சான்று பெறும் பணிக்கு 19.08.2020 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

**ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு:-**

| வ.எண் | பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1. | M/s. ஜே.டி.அன்ட் கோ,<br>160, கோவை ரோடு,<br>பொள்ளாச்சி. | ரூ.1,99,774/— |
| 2. | பீ.பி.செரிப் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்,<br>25/67, ஏ.பி.டி ரோடு,<br>பொள்ளாச்சி | ரூ.2,15,350/— |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. ஜே.டி.அன்ட் கோ, 160, கோவை ரோடு, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s. ஜே.டி.அன்ட் கோ, 160, கோவை ரோடு,பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. பொது சுகாதாரப் பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2140/2020/எச்2**

**2374)** நகராட்சிக்கு சொந்தமான அண்ணா மத்திய பேருந்து நிலைய கடை எண்.10-க்கு 27.09.2019, 21.01.2020, 06.02.2020, 10.03.2020, 10.06.2020, 25.06.2020, 09.07.2020 மற்றும் 18.08.2020 ஆகிய நாட்களில் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் தற்போது கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| **வ.எண்** | **பெயர் / முகவரி** | **மாத வாடகை ரூ.** |
|---|---|---|
| 1 | திருமதி,பி,மகாலட்சுமி,<br>74 பி.கே.எஸ் காலனி,<br>பொள்ளாச்சி | 20,116/- |

| | |
|---|---|
| | இக்கடையானது 01.04.2019 முதல் காலியாக உள்ளது. பலமுறை ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் யாரும் முன் வரவில்லை. எனவே, தற்போது வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1) கடந்தாண்டு தொகை ரூ.40,212/- ஐ விட குறைவாக மாத வாடகை தொகை ரூ.20,116/- ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது. இக்கடையானது கடந்த 17 மாதங்களாக காலியாக உள்ளதாலும், 8 முறை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் யாரும் முன் வராத காரணத்தாலும், திருமதி.பி.மகாலட்சுமி, என்பவர் 25.06.2020 அன்று ரூ.20,116/- ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்த பின்பு இரண்டு முறை ஒப்பந்தப்புள்ளி கோரியும் எவரும் முன்வராத காரணத்தாலும், தொடர் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு, நகராட்சிக்கு வருவாயினை பெருக்கும் நோக்கில் தற்போது வரப்பெற்றுள்ள திருமதி.பி.மகாலட்சுமி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>2) மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.1131/2020/அ6** |
| **2375)** | பொள்ளாச்சி நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள **TN 41 B 7878** அம்பாஸிட்டர் காரில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்யவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.**96,000/—**க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம். |
| **2376)** | நகராட்சிக்கு சொந்தமான காந்தி தினசரி காய்கறி வியாபார சந்தை சில்லறை வியாபார கடை எண்.36 திரு.முத்துச்சாமி என்பவருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. (வரிவிதிப்பு எண்.076/BD01/00100) அன்னார் சரிவர வாடகை தொகை செலுத்தாமல் கடையினை பூட்டி வைத்துள்ளதாலும், பல முறை வாடகை தொகை செலுத்திட தெரிவித்தும் வாடகை தொகை செலுத்தப்படாததால், கடையானது 18.08.2020-ல் பூட்டி நகராட்சி வசம் பொறுப்பேற்கப்பட்டுள்ளதாக சந்தை கண்காணிப்பாளர் குறிப்பு வழங்கியுள்ளார். எனவே, இக்கடையின் குத்தகை உரிமத்தினை 18.08.2020 முதல் ரத்து செய்து ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) குத்தகைதாரர் செலுத்தப்பட வேண்டிய ஆகஸ்ட் 2020 வரையிலான வாடகை தொகையினை வைப்புத் தொகையில் இருந்து ஈடு செய்தும், மீத வைப்புத் தொகையினை பறிமுதல் செய்தும் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.<br>**ந.க.எண்.1131/2020/அ6** |
| **2377)** | பொள்ளாச்சி நகராட்சியின் **22**வது வார்டு சுந்தரம் லே—அவுட் பகுதியில் கிணற்றுநீர் விநியோகத்திற்கான குழாய்கள் இன்றி உள்ளது. இப்பகுதி பொது மக்கள் குடிநீர் தவிர இதர பயன்பாட்டிற்கு கிணற்றுநீர் விநியோகமின்றி சிரமப்படுகின்றனர். எனவே இப்பகுதியில் **200**மீ நீளத்திற்கு கிணற்றுநீர் விநியோக பகிர்மான குழாய் அமைக்கவும், இதற்கான மதிப்பீட்டு ரூ.**1.00** இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.** பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம். |
| **2378)** | பொள்ளாச்சி நகராட்சியின் குடிநீர் விநியோகத்தில் அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நீரேற்றம் செய்ய இயங்கும் 75 கு.தி மின்மோட்டார் யூனிட் 1ன் Starter-ல் இயக்கத்தின் போது மின் வேறுபாட்டால் Contractors, OLR, Timer, Terminals மற்றும் Inner wiring cables |

பழுதடைந்துள்ளது. இதனால் மின் மோட்டாரின் இயக்கம் தடைபட்டுள்ளது. எனவே பழுதடைந்துள்ள மின் சாதனங்களை புதுப்பித்து இயக்க வேண்டியுள்ளது. இதற்கு உத்தேச செலவினம் ரூ.70,000/– ஆகும். இப்பணியினை மேற்கொள்வதற்கும், செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.3402/2020/இ2**

**2379)** பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.07 அண்ணா காலனி (இந்திரா நகர்) பகுதியில் அமைந்துள்ள ஆர்.ஆர்.நகர் பகுதியானது நகரளவு வார்டு 08, பிளாக் எண்.02, நகரளவு எண்கள்.2 பகுதி மற்றும் 1 பகுதியில் நகர் ஊரமைப்பு துறை ந.ஊ.து.இஎண்.1073/2018ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு நகராட்சியின் மூலம் இறுதி ஒப்புதல் 1836/2017/ஜி1, நாள் 11.07.2018ல் வழுங்கப்பட்டுள்ளதாக நகரமைப்பு ஆய்வரால் குறிப்பு வழங்கப்பட்டுள்ளது. வருவாய் உதவியாளர் மற்றும் வருவாய் ஆய்வர் குறிப்பில், ஆர்.ஆர்.நகர் பகுதியானது “சி” மண்டலத்தில் அமைந்துள்ளதாகவும், அப்பகுதி அண்ணா காலனி (இந்திரா நகர்) பகுதி அருகில் அமைந்துள்ளதால் இப்பகுதியையும் “சி” மண்டலத்தில் நிர்ணயம் செய்து கணினியில் வார்டு எண்.07 ஆர்.ஆர்.நகர் என்ற பெயரை கணினியில் ஏற்றம் செய்திட மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1770/2020/ஜி1**

**2380)** நகராட்சிக்கு சொந்தமான ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மேற்குபுறமுள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 18.08.2020-ல் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| **வ.எண்.** | **பெயர்** | **ஆண்டு குத்தகை தொகை ரூ.** |
|---|---|---|
| 1 | திரு.அ.அப்துல் ஹாரூன்,<br>8/4 குப்புச்சாமி வீதி,<br>ராஜாமில் ரோடு, பொள்ளாச்சி | 27,000/- |
| 2 | திரு.ஆர்.சிவராமகிருஷ்ணன்,<br>18 ஜோதிநகர், பொள்ளச்சி. | 25,500/- |

மேற்காண் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 02-ல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியில் வைப்புத் தொகை செலுத்தாமல் ஒப்பந்தப்புள்ளி மட்டும் சமர்ப்பித்துள்ளார். ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) வரிசை எண் 02-ல் திரு.ஆர.சிவராமகிருஷ்ணன் என்பவர் வைப்புத் தொகை செலுத்தாமல் ஒப்பந்தப்புள்ளி மட்டும் சமர்ப்பித்துள்ளார் என்பதால் அன்னாரது ஒப்பந்தப்புள்ளியை நிராகரிக்கலாம்.
2) கடந்தாண்டு தொகை ரூ.25,344/-ஐ விட ரூ.1,656/- கூடுதலாக திரு.அ.அப்துல் ஹாரூன் என்பவர் கேட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி ஆண்டு குத்தகை தொகை ரூ.27,000/- யினை மன்றம் ஏற்கலாம்.
3) குத்தகை காலம் 31.08.2020 உடன் முடிவடைவதால் முன் அனுமதி பெற்று 01.09.2020 முதல் திரு.அ.அப்துல் ஹாரூன் என்பவருக்கு ஒப்படைப்பு செய்து நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.497/2020/அ6**

| | |
|---|---|
| | |
| 2381) | இந்நகராட்சியில் மேலாளராக 11.03.2020 முதல் 11.08.2020 வரை முழுக்கூடுதல் பொறுப்பு வகித்த திரு.எஸ்.வெங்கிடேஸ்வரன், வருவாய் அலுவலர் அதற்கான ஊதியம் மற்றும் பிறபடிகள் வழங்க கோரியுள்ளார். அடிப்படை விதி 49(1)சி–ன்படி அதிகபட்சமாக மேற்படி பதவிக்கு 5 மாதங்கள் மட்டுமே ஊதியம் வழங்க இயலும். அதன்படி உரிய விதிகளின்படி 5 மாதங்களுக்கு ஊதியம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.2952/2020/சி1** |
| 2382) | பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட, டி.கோட்டாம்பட்டி, பல்லடம் சாலையில் அமைந்துள்ள அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவான ரத்தினசபாபதிபுரம் பகுதியில் உள்ள பொது ஒதுக்கீடான பூங்கா இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு இருந்து வந்ததை நகராட்சியால் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இவ்விடம் பொது மக்கள் பயன்பாட்டிற்கு வர உள்ளதால் அவசியம் மின் இணைப்பு வேண்டியுள்ளது. மின் இணைப்பிற்கான பணிகள் மேற்கொள்வதற்கும், மின்வாரியத்திற்கான கட்டண தொகைகள் செலுத்துவதற்கும் மதிப்பீடு ரூ.7500/– தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே இப்பணியினை மேற்கொள்வதற்கும், செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம். |
| 2383) | பொள்ளாச்சி நகராட்சியின் குடிநீர் விநியோகத்தில் அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மின்மோட்டார்கள் மூலம் நீரேற்றம் செய்யப்பட்டு வருகிறது. மின்மோட்டார் இயக்ககத்தில் Power Factor குறையாமல் இருக்க Capacitor –கள் பொருத்தப்பட்டுள்ளன. இதனால் மின் பயன்பாடு (Power Consumption) வெகுவாக குறையும். Panel Board–ல் அமைக்கப்பட்டுள்ள 25 KVAR Capacitor–கள் இரண்டும் வலுவிழந்து பழுதடைந்துள்ளது. இதனால் PF வெகுவாக குறையும், மேலும் மின்வாரியத்தால் அபராதம் விதிக்கப்படும். எனவே பழுதடைந்துள்ள Capacitor-களை புதுப்பித்து இயக்க வேண்டியுள்ளது. இதற்கு மதிப்பீடு ரூ.25000/– ஆகும். இப்பணியினை மேற்கொள்வதற்கும், செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம். |
| 2384) | பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவில் இயங்கி வரும் வாகன எண். TN 41 T 2983 அலுவலக பணி நிமித்தம் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அலுவலகத்திற்கு திட்ட மதிப்பீடுகள் சமர்ப்பிக்க ஈப்பு வாகனத்தில் சென்று வரப்பட்டதில், 16.06.2020 அன்று வரும் வழியில் வாகன ஓட்டுநர் திரு.எம்.முகம்மது ஸ்டாலின் அவர்களால் அங்கு ASALI Agencies, Maamallapuram Bunk–ல் எரிபொருள் நிரப்பப்பட்டுள்ளது. இதற்கான தொகை ரூ.2575.65/– திரு.எம்.முகம்மது ஸ்டாலின், ஓட்டுநர் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம். |
| 2385) | பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட இந்திரா நகர் விஸ்தரிப்பு அருகில் ஒரு வேப்ப மரம் உள்ளது. இம்மரத்தினை வெட்டி எடுத்து கொள்ளும் பணிக்கு 26.08.2020 அன்று பொது ஏலம் நடைபெற்றதில் கலந்து கொண்ட மூன்று ஏலதாரர்களின் உயர்ந்த பட்ச ஏல கேள்விகள் மன்றத்தின் |

பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கலாம்.

| வ.எண். | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்த பட்ச ஏல கேள்வி |
|---|---|---|
| 1 | திரு. கே.தங்கராஜ்,<br>96, இந்திரா நகர்,<br>மகாலிங்கபுரம்,<br>பொள்ளாச்சி. | ரூ.15000/- |
| 2 | திரு.ஆர்செந்தில்குமார்,<br>58, இந்திரா நகர்,<br>மகாலிங்கபுரம்,<br>பொள்ளாச்சி. | ரூ.14500/- |
| 3 | திரு.வி.ரவி,<br>13/26 முருகன் லே அவுட்,<br>பொள்ளாச்சி. | ரூ.14600/- |

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1. மேற்காணும் மூன்று ஏலக்கேள்விகளில் அதிகபட்ச ஏலக்கேள்வி கேட்கப்பட்டுள்ள திரு. கே.தங்கராஜ்,பொள்ளாச்சி அவர்களின் ஏலக்கேள்வியை மன்றம் ஏற்கலாம்.

2. உயர்ந்தபட்ச ஏலதாரர் திரு. கே.தங்கராஜ், பொள்ளாச்சி அவர்களின் ஏலத்தொகை ரூ.15000/- மற்றும் GST வரித்தொகை ரூ.1800 நகராட்சி கருவூலகத்தில் செலுத்தி உள்ளார். (செ.சீ.எண்.076 / PMC/11 /20-21 /0001663, நாள்- 26.08.2020)

3. போக்குவரத்து மற்றும் பொது மக்களின் பாதுகாப்பு நலன் கருதி ஏலம் விடப்பட்டுள்ள மரத்தினை உடனடியாக வெட்டி எடுத்துக் கொள்ள ஆணையாளர்மற்றும் தனி அதிகாரி அவர்களிடம் அனுமதி பெற்று உத்திரவு வழங்குவதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

**ந.க.எண்.0840/2020/இ2**

**2386)** பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான குமரன் நகரில் நடுநிலைப்பள்ளி செயல்பட்டு வருகிறது. இப்பள்ளி வளாகத்தை பாதுகாக்கும் பொருட்டு சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ளது.

மழைக்காலங்களில் பெய்யும் மழைநீராலும், இவ்வளாகத்தில் சுற்றுச்சுவர் அருகில் உள்ள பெரிய மரங்களின் வேர்களின் வளர்ச்சியாலும், வளாகத்தின் மேற்குப்பகுதியின் சுற்றுச் சுவர்களின் விரிசல்கள் ஏற்பட்டு கீழே விழும் நிலையிலுள்ளது.

கீழே விழுந்தால் ஏற்படும் அசம்பாவிதத்தை தவிர்க்கும் பொருட்டு, விரிசல் உண்டான பாதுகாப்பு சுவற்றினை அகற்றிவிட்டு புதியதாக சுற்றுச்சுவர் அமைக்க வேண்டியுள்ளது.

சுற்றுச்சுவர் அமைக்க ரூ.6..40 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை கல்விநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.3636/2020/இ1**

**2387)** பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குள் அமையப்பெற்ற நகராட்சிக்குச் சொந்தமான கீழ்க்கண்ட திறவிடப்பகுதிகளை ( Park Site) பாதுகாக்கும் பொருட்டு, கம்பி வேலியுடன் பெயர்ப்பலகைகள் அமைக்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சோமசுந்தராபுரம், ராஜ ராஜேஸ்வரி நகர் எக்ஸ்டன்சன், கோட்டம்பட்டி வடக்கு மற்றும் S.R. லே அவுட் ஆகிய இடங்களில் உள்ள பூங்காக்களில் கம்பி வேலியுடன் பெயர்பலகை அமைத்தல். | 9.10 |

மேற்காணும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் மதிப்பீடுத் தொகைகளை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.
3. பொது நிதியில் மேற்கொள்ளப்படும் செலவுத் தொகையினை அரசு நிதி கிடைக்கப் பெறும் பட்சத்தில் அதில் ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**2388)** பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் தெப்பக்குளம் வீதி தெற்குப்பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் பணிக்கு ரூ.5.90 இலட்சம் மதிப்பீட்டிற்கு 21.08.2020 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1. | திருவாளர்கள்: தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.27% குறைவு. |
| 2. | திரு:ஆர்.சுப்ரமணியம்,பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 3.52% அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.27% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள்: தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.27% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள்: தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.3369/2020/இ1**

**2389)** பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் வார்டு எண்:18, ஆரோக்கிய நாதர் வீதியில் மழைநீர் வடிகால் கட்டுதல். பணிக்கு ரூ.4.90 இலட்சம் மதிப்பீட்டிற்கு 21.08.2020 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1. | திருவாளர்கள்: தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.20% குறைவு. |
| 2. | திரு:ஆர்.சுப்ரமணியம்,பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 3.53% அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.20% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்

திருவாளர்கள்: தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.20% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள்: தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்: 3350/2020/இ1**

**2390)** பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் வார்டு எண்.2, பொன் நகர் பூங்காவில் நடைபயிற்சி பாதை சிமெண்ட் இருக்கைகள் மற்றும் மின்விளக்கு வசதிகள் செய்தல் பணிக்கு ரூ.4.90 இலட்சம் மதிப்பீட்டிற்கு 21.08.2020ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்க்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1. | திருவாளர்கள். தண்டபாணி அன் கோ<br>பொள்ளாச்சி | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.21% குறைவு |
| 2. | திரு.ஆர்.சுப்பிரமணியம்<br>பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.61% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிக்ளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.21% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.21% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பநத்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.3351/2020/இ1**

**2391)** உலகளவில் கொரோனா COVID-19 வைரஸ் தொற்று பரவி வருகிறது. அதனை தடுக்கும் பொருட்டு பொள்ளாச்சி நகராட்சி மூலம் நகரப் பகுதிகளில் போர்கால தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இதனையும் மீறி நகரப் பகுதிகளில் COVID-19 Positive பொதுமக்களுக்கு வரும் பட்சத்தில் அப்பகுதியினை தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக (Containment Zone) பிரித்து தடுப்புகள் அமைத்து நோயினை பரவாமல் தடுத்திட உடனடியாக பணிகளை அவ்வப்போது மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. இப்பணிக்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு நகராட்சி விதிகள் 1920 பிரிவு 15-ன் கீழ் பொதுநிதியில் மேற்கொள்ளவும் அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே உள்ளூரில் விலைப்புள்ளி கோரி இப்பணியை உடனடியாக செய்து முடிக்க வேண்டியுள்ளதால் உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|

<table>
<tr><td></td><td>
<table>
<tr><td>1</td><td>திரு.G.விக்னேஷ்,<br>12/28, வேட்டைக்காரன் புதூர்,<br>பொள்ளாச்சி.</td><td>மதிப்பீட்டு விலையை விட 0.02% குறைவு.</td></tr>
<tr><td>2</td><td>திருவாளர்கள்: கே.ஆர்.காளிதாஸ்அன் கோ,<br>5, சக்தி கார்டன்,<br>பாலக்காடு ரோடு,<br>பொள்ளாச்சி.</td><td>மதிப்பீட்டு விலையை விட 2.58% அதிகம்.</td></tr>
<tr><td>3</td><td>திரு.A.சதீஸ்குமார்,<br>9/2, மதுரை வீரன் கோவில் வீதி,<br>டி.கோட்டாம்பட்டி,<br>பொள்ளாச்சி.</td><td>மதிப்பீட்டு விலையை விட 3.20% அதிகம்.</td></tr>
</table>
<br>வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் மற்றதை விட குறைவாகவும் மதிப்பீட்டு விலையை விட 0.02% குறைவாகவும் விலைப்புள்ளி அளித்துள்ள திரு.G.விக்னேஷ் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டு, பணிகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 - பிரிவு 15 ன் கீழ் தனி அலுவலரின் அனுமதி பெற்று பணிகளை செய்ய மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
</td></tr>
<tr><td>2392)</td><td>பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இயக்கப்படும் வாகன எண்.TN 41 AU 6328 (LCV) வாகனத்தின் கிளட்ச் பணிகள், ஆயில் சர்வீஸ், பில்டர்கள் மாற்றுதல், வாட்டர் சர்வீஸ் மற்றும் ஜென்ரல் செக்கப் ஆகிய பணிகள் செய்ய உத்தேச செலவினம் ரூ.15,500/—த்திற்கும், விலைப்புள்ளிக் கோரி பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமுதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது சுகாதாப் பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.3425 /2020 /எச்2</td></tr>
<tr><td>2393)</td><td>பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இயக்கப்படும் வாகன எண்.TN 41 AP 2280 (டிராக்டர்) வாகனத்தின் பேட்டரி புதிதாக மாற்றம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.6500/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது சுகாதாப் பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.3482 /2020 /எச்2</td></tr>
<tr><td>2394)</td><td>பொள்ளாச்சி நகராட்சி பொது சுகதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு இயக்கப்பட்டு வரும் வாகன எண்.TN 41 AH 2138 (TATA ACE) வாகனத்திற்கு பழுது நீக்கம் செய்து தகுதிச்சான்று பெறும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.95,000/—திற்கும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:</td></tr>
</table>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாப் பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.3582 /2020 /எச்2**

**2395)** பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளக்கு இயக்கப்பட்டு வரும் வாகன எண். TN 41 AM 2687 (டிப்பர்) வாகனத்திற்கு பழுது நீக்கம் செய்து தகுதிச்சான்று பெறும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/–திற்கும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாப் பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.3583 /2020 /எச்2**

**2396)** பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு பணியின் ஒரு பகுதியாக உள்ளாட்சி அமைப்புகளின் அனைத்து குடியிருப்புகளுக்கும் ஊட்டச்சத்து மாத்திரை மற்றும் கபசுர குடிநீர் பொட்டலங்கள் அடங்கிய பெட்டகத்தினை பொது நிதியிலிருந்து வழங்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் உத்திரவு பிறப்பித்ததன் பேரில் மேற்காண் மருந்துகள் கொள்முதல் செய்யும் பணிக்கு ரூ.4,50,000/– மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது. பணியின் அவசர அவசியம் கருதி 07.08.2020ஆம் தேதி விலைப்புள்ளி கோரி விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

**விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு:-**

**கபசுர குடிநீர்:**

| Sl.no | Name | Estimated Amount |
|---|---|---|
| 1. | M.B.Pharma Siddha & Ayurvedav Pharma, Madurai. | Rs. 33/- (50gm pocket) |
| 2. | Sri Harshini Herbals, 113, T.P.K.Road Madurai. | Rs. 38/- (50gm pocket) |
| 3. | Rackshely Herbals Labs, 1/629, Pudukkottai Road, Trichy. | Rs. 37/- (50gm pocket) |

**ஜிங்க் மற்றும் மல்டிவிட்டமின்**

| Sl.no | Descriéion | Kniss Laboratories (P) LTD Chennai | Success Pharma Pollachi |
|---|---|---|---|
| 1. | Zinc | Rs.54.91/- (100 nos) | Rs. 3.50/- (100 nos) |
| 2. | Multivitamin | Rs.58.80/- (100 nos) | Rs. 15.40/- (100 nos) |

**ஆர்சனிக் ஆல்பம்**

| Sl.no | Name | Estimated Amount |
|---|---|---|
| 1. | Dr, Santhana‡s World Class Homeopathy medicals | Rs. 3.50/- (30-Pills-1 Draham) |

| | | |
|---|---|---|
| | Vavilla Complex,<br>Tiruppur. | |
| 2. | Geneva Yuva,<br>Nehru Street,<br>Tiruppur. | Rs. 4.50/- (30-Pills-1 Draham) |
| 1. | R.R.Associates,<br>203,First Floor,<br>Trichy. | Rs. 4.00/- (30-Pills-1 Draham) |

**பாக்ஸ் & பேக்:-**

| Sl.no | Name | Printing Box | Printing Bag |
|---|---|---|---|
| 1. | Brand Media,<br>Thiyagi Kumaran St,<br>P.N.Pudur,<br>Coimbatore. | Rs.7.50/- | Rs.7.00/- |
| 2. | Color Drops,<br>Thadagam Road,<br>Coimbatore. | Rs.8.50/- | Rs.8.00/- |
| 3. | V.K.Ads,<br>Palani boyar St,<br>Kurichi. | Rs.9.00/- | Rs.8.50/- |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் கபசுர குடிநீருக்கு குறைவான விலைப்புள்ளி வழங்கிய M.B.Pharma Siddha & Ayurvedav நிறுவனத்தின் விலைப்புள்ளியும், ஜிங்க் மற்றும் மல்டிவிட்டமின் மாத்திரைகளுக்கு Kniss Laboratories (P) LTD விலைப்புள்ளியும், ஆர்சனிக் ஆல்பம் மாத்திரைகளுக்கு Dr, Santhana‡s World Class Homeopathy medicals அவர்களின் விலைப்புள்ளியும், Box and Bag Brand Media அவர்களின் விலைப்புள்ளியையும் ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டு, பணிகளின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு–15ன் கீழ் தனி அலுவலரின் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண்.3344 /2020 /எச்2**

**2397)** பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட நகரளவு வார்டு.4, நகரளவு எண்கள்.702, 704 மற்றும் 705 திரு.நாச்சிமுத்து என்பவர் பொள்ளாச்சி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.No.372/2016-ல் நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கில், பொள்ளாச்சி நகராட்சி ஆணையாளர் 3–வது பிரதிவாதியாகவும் நகரமைப்பு அலுவலர் 4ம் பிரதிவாதியாகவும் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

இவ்வழக்கில் நகராட்சி சார்பாக வாதாடவும், அதற்கான எதிர்வாதுரை தாக்கல் செய்வதற்காகவும், நகராட்சி நிலை சட்ட ஆலோசகர் திரு.K.சம்பத்குமார், அவர்களுக்கு வழங்க வேண்டிய வழக்கறிஞர் கட்டணத்திற்கான உத்தேச செலவினத்தற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.5577/2016/ஜி1**

| | |
|---|---|
| 2398) | பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட டி–கோட்டாம்பட்டி ஈஸ்வரன் கோவில் வீதியில் ராசாகவுண்டர் (எ) சின்னராஜ் மற்றும் பாலகணேஷ் என்பவர்கள் நகராட்சிக்கு சொந்தமான வீதியில் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்றிடக் கோரி, திரு.M. சரவணக்குமார் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.W.P.No.18176/2018, நாள்-17.07.2018ல் வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கில் 1–வது பிரதிநிதியாக பொள்ளாச்சி நகராட்சி ஆணையாளர் சேர்க்கப்பட்டுள்ளார்.<br>மேற்படி வழக்கினை நகராட்சி சார்பாக நடத்திட சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் திரு.B.ஆனந்த் நியமிக்கப்பட்டதற்கும், வழக்கினத்திற்கும் ஆகும் உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.3731/2018/ஜி1** |
| 2399) | பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட ஈஸ்வரன் கோவில் வீதியில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ஆக்கிரமிப்பினை அகற்ற நடவடிக்கை மேற்கொண்டு அறிவிப்பு வழங்கப்பட்டதை எதிர்த்து, திரு.C.பாலசுப்பிரமணியம் என்பவர் பொள்ளாச்சி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.No.56/2019 மற்றும் I.A.No.02/2019-ல் நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கில், பொள்ளாச்சி நகராட்சி ஆணையாளர் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார்.<br>இவ்வழக்கில் நகராட்சி சார்பாக வாதாடவும், அதற்கான எதிர்வாதுரை தாக்கல் செய்ததற்காகவும், நகராட்சி நிலை சட்ட ஆலோசகர் திரு.K.சம்பத்குமார், அவர்களுக்கு வழங்க வேண்டிய வழக்கறிஞர் கட்டணத்திற்கான உத்தேச செலவினத்தற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.1018 /2019 /ஜி1** |
| 2400) | பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட நகரளவு வார்டு.4, நகரளவு எண்.101/1, திரு.R.நடராஜன், என்பவர் பொள்ளாச்சி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.No.276/2018 மற்றும் I.A.No.1145/2018-ல் நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கில், பொள்ளாச்சி நகராட்சி ஆணையாளர் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார்.<br>இவ்வழக்கில் நகராட்சி சார்பாக வாதாடவும், அதற்கான எதிர்வாதுரை தாக்கல் செய்ததற்காகவும், நகராட்சி நிலை சட்ட ஆலோசகர் திரு.K.சம்பத்குமார், அவர்களுக்கு வழங்க வேண்டிய கட்டணத்திற்கான உத்தேச கட்டணத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.4531 /2018 /ஜி1** |
| 2401) | பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட நகரளவு வார்டு.A, பிளாக் எண்.23, நகரளவு எண்கள்.1237 மற்றும் 1238 அங்கீகரிக்கப்பட்ட ஸ்ரீ கோபால கிருஷ்ணா அவென்யூ மனைப்பிரிவில் அமைந்துள்ள பூங்கா இடத்தில் பாதாள சாக்கடை நீரேற்று நிலையம் அமைப்பதற்கு ஆட்சேபனை தெரிவித்து திருமதி.டி.கனிமொழி என்பவர், பொள்ளாச்சி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.No.140/2019 மற்றும் I.A.No.02/2019-ல் நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கில், 1–வது பிரதிவாதியாக ஆணையாளர், பொள்ளாச்சி நகராட்சி சேர்க்கப்பட்டுள்ளார்.<br>இவ்வழக்கில் நகராட்சி சார்பாக வாதாடவும், அதற்கான எதிர்வாதுரை தாக்கல் செய்ததற்காகவும், நகராட்சி நிலை சட்ட ஆலோசகர் திரு.K.சம்பத்குமார், அவர்களுக்கு வழங்க வேண்டிய கட்டணத்திற்கான உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.2071 /2019 /ஜி1** |
| 2402) | பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கோட்டூர் ரோடு விஸ்தரிப்பு அபிவிருத்தி திட்டத்தில் நகரளவு வார்டு.B, பிளாக் எண்.6, நகரளவு எண்.490/2–ல் அமையும் நிலையில் உள்ள 40’ அடி அகல A5-A5 தென்வடல் திட்டசாலையின் கிழபுற ஓர் பகுதி சாலை விரிவாக்கத்திற்கான இடமாக |

| | |
|---|---|
| | அமைகிறது. மேற்படி சாலையின் ஒரு பகுதியான நகரசார் ஆயவரின் குறிப்பின்படி 103 சதுரடி பரப்பளவுள்ள இடத்தினை மனுதாரர்களான திரு.P.A.உம்முசல்மா–1 மற்றும் திருமதி.M.சலீமாபானு–2 என்பவர்கள் நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்க 15.07.2020 தேதியிட்ட விண்ணப்பத்தில் சம்மதம் தெரிவித்து உரிய இணைப்புகளோடு சமர்ப்பித்துள்ளார்.<br>எனவே மனுதாரரின் விண்ணபத்தில் தெரிவித்தவாறு மேற்கண்ட A5-A5 திட்டசாலை விஸ்தரிப்பு பகுதியினை நகராட்சி தானமாக பெறுவதற்று மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.2941 /2020 /ஜி1** |
| **2403)** | பொள்ளாச்சி உள்ளூர் திட்டக்குழும எல்லைக்குட்பட்ட நகரளவு வார்டு.H, பிளாக் எண்.16, நகரளவு எண்.20/2A2–ல் அமைந்துள்ள 1.81 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தினை Public and Semi Publicலிருந்து குடியிருப்பு உபயேகமாக மாற்றி அமைக்க அனுமதி கோரி மனுதாரர் திரு.R.முத்துக்கிருஷ்ணன் என்பவர் 12.05.2020ம் நாளிட்ட மனுவில் தெரிவித்துள்ளார்.<br>மனுதாரர் இடமானது அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் Public and Semi Public என்ற நில உபயோகத்தில் உள்ளது. தற்போதைய தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மந்நும் கட்டிட விதிகள்–2019ல் மேற்படி நில உபயோகத்தினை Institutional Use என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதில் குடியிருப்பு உபயேகாத்திற்கு 500 சதுரமீட்டர் மட்டுமே அனுமதி வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் மனையிடத்திற்கு நகராட்சி பராமரிப்பில் உள்ள நகரளவு வார்டு.H, பிளாக் எண்.23, நகரளவு எண்.169–ல் 45 அடி அகல சாலை அணுகுபாதையாக அமைகிறது. மனுதாரரின் உத்தேச இடத்திற்கு மேற்குபுறம் மற்றும் வடக்குப்புறம் குடியிருப்பு உபயோகமாக, அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகள் அமைந்துள்ளது. (ம.வ/ந.ஊ.இ.எண்.1103/94 மற்றும் ம.வ/ந.ஊ.இ.எண்.162/98) அதில் குடியிருப்பு அபிவிருத்திகள் அமைந்துள்ளது. மேலும், மனுதாரர் இடமானது குடியிருப்பு உபயோகத்திற்கு ஏற்ற இடமாக உள்ளது. எனவே, மனுதாரரின் கோரிக்கையினை அரசு செயலாளர் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அவர்களுக்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், கோவை மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் வழியாக மேல் நடவடிக்கைக்கு அனுப்பி வைக்க உள்ளூர் திட்டக்குழுமத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1. அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டதில் Public and Semi Public உபயோகத்திலிருந்து குடியிருப்பு உபயோகமாக மாற்றி அமைக்க உள்ளூர் திட்டக்குழுமம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.2043 /2020 /ஜி1** |
| **2404)** | பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டிட அனுமதி கோரி விண்ணபிக்கும்போது தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதி 2019தில் குறிப்பிட்டுள்ளவாறு கட்டிட விதி–35ன் உபவிதி 22(b)-ல் குறிப்பிட்டுள்ள Display Board-க்கான வைப்புத் தொகை ரூ.10,000/– இதுவரை நகராட்சி மூலம் வசூல் செய்யப்பட்டது. தற்போது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் துறையின் அரசாணை ண்.16, நாள்–31.01.2020ன்படி Display Board-க்கென ஏற்கனவே வசூல் செய்யப்பட்ட வைப்புத் தொகை ரூ.10,000/–லிருந்து வட்டியில்லா மீளப்பெறும் வைப்புத் தொகையாக ரூ.1500/– என திருத்தியமைக்கப்பட்டு வசூல் செய்யப்பட வேண்டும் என உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே மேற்காண் அரசாணையின்படி Display Board-க்கென கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டவாறு 2020–21 இரண்டாம் அரையாண்டு முதல் அரசால் குறைத்து நிர்ணயம் செய்யப்பட்ட தொகையினை வசூல் செய்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையரின் ஒப்புதல் பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.5750 /2019 /ஜி3** |
| **2405)** | பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட நகரளவு வார்டு:B, பிளாக் எண்:15, நகரளவு எண்:778/2-ல் அமைந்துள்ள அனுமதியற்ற மனப்பிரிவான சக்திநகரில் மனை எண்:4-ன் உரிமையாளர் |

| | |
|---|---|
| | திரு.எஸ்.கார்த்திகேயன் என்பவர் அபிவிருத்தி கட்டணமாக ரூ.53570/-ஐ நகராட்சியிலும், வரன்முறைக் கட்டணம் ரூ.19350/-ஐ பொள்ளாச்சி நகராட்சி பாரத ஸ்டேட் வங்கிக் கணக்கிலும் செலுத்தியுள்ளார். மேலும் வரன்முறைக் கட்டணத்தினை பொள்ளாச்சி ICICI வங்கி நகராட்சி கணக்கிலும் தவறுதலாக செலுத்தியுள்ளார்.<br>எனவே, மனையினை வரன்முறைப்படுத்த பாரத ஸ்டேட் வங்கியில் தொகையினை செலுத்திய பின்னரும், மீண்டும் பொள்ளாச்சி ICICI வங்கி நகராட்சி கணக்கில் கூடுதலாக செலுத்தப்பட்ட வரன்முறைக் கட்டணம் ரூ.19350/-ஐ மனையின் உரிமையாளருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.3469 /2020 /ஜி1** |
| **2406)** | பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பல்லடம் சாலை, நகரளவு வார்டு.H, பிளாக் எண்.15, நகரளவு எண்.5/2-ல் ரத்தின சபாபதிபுரம் மனைப்பிரிவில் உள்ள பூங்கா இடத்தினை பராமரிக்க அனுமதி கோரி இரத்தினசபாபதிபுரம் குடியிருப்போர் நலச்சங்கத்தினர் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்கள். மேற்படி பூங்கா இடத்தினை பராமரிக்க அனுமதி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் பூங்காவினைப் பராமரிக்க அனுமதி வழங்கலாம்.<br>1. பூங்கா இடத்தில் பணி மேற்கொள்ளும் பொழுது நகராட்சி பொறியாளர் / இளம்பொறியாளர் / உதவி பொறியாளர் அவர்கள் மேற்பார்வையில் நடைபெற வேண்டும்.<br>2. பூங்கா இடத்தில் நிரந்தர மற்றும் தற்காலிகக் கட்டிடம் நகராட்சி அனுமதியின்றி கட்டக்கூடாது.<br>3. மேற்படி இடம் நகராட்சிக்கு தேவைப்படும் பட்சத்தில் எவ்வித நிபந்தனையுமின்றி ஒப்படைக்கப்பட வேண்டும். எவ்வித உரிமையும் கோரக்கூடாது.<br>4. பூங்காவில் செய்யப்படும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக ஆணையர் அவர்களுக்கு அவ்வப்போது தகவல் தெரிவிக்க வேண்டும்.<br>5. பூங்கா நுழைவாயிலில் உரிமையாளர், ஆணையாளர் பொள்ளாச்சி நகராட்சி எனவும், பராமரிப்பு தங்களின் அமைப்பின் பெயரும் உள்ள பலகை நிறுவப்பட வேண்டும்.<br>6. நகராட்சி தங்கள் அமைப்பிற்கு எந்த உபயோகத்திற்கு அனுமதி வழங்கப்படுகிறதோ அதற்கு மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும்.<br>7. மேற்படி பூங்காவிற்கு பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்த வழிவகை செய்யப்பட வேண்டும்.<br>8. மேற்படி பூங்கா இடம் தொடர்பாக நீதிமன்றங்களுக்கு செல்லும் பட்சத்தில் இவ்வுத்திரவு செல்லத்தக்கதல்ல.<br>9. நகராட்சியில் விண்ணப்பம் செய்து மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை உரிமைத்தினை புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.<br>10. பூங்கா இட உபயோகத்திற்கு மின் இணைப்பு ஆணையாளர், பொள்ளாச்சி நகராட்சி என்ற பெயரில் பெறப்பட வேண்டும்.<br>11. மின் கட்டணம் மற்றும் பூங்கா பராமரிப்பு செலவினம் தங்களது அமைப்பு மூலம் மேற்கொள்ள வேண்டும்.<br>12. அபிவிருத்திப் பணிக்காக செலவிடப்பட்ட தொகை எதுவும் நகராட்சியில் திருப்பி வழங்கப்படமாட்டாது.<br>13. மதம் சம்பந்தமாகவோ அல்லது அரசியல் சம்பந்தமாகவோ மேற்படி இடத்தினை பயன்படுத்தக் கூடாது.<br>14. பராமரிப்பு பணியினை ரத்து செய்து கொள்வதாக இருக்கும் பட்சத்தில் மூன்று மாத காலம் முன்னதாக நகராட்சிக்கு எழுத்துப் பூர்வமாக தெரியப்படுத்த வேண்டும்.<br>15. மேற்படி பூங்கா இடத்தில் நிலையில் உள்ள உள்விளையாட்டு அரங்கத்தினை பொதுமக்கள் அனைவரும் எவ்விதக் கட்டணமும் இன்றி விளையாட அனுமதிக்கப்படவேண்டும்.<br>16. உள் விளையட்டு அரங்கம் உபயோகப்படுத்துவதற்கு நேர அளவு விபரம் (காலை, மாலை) முன்பக்கம் தெளிவாக குறிப்பிடப்படவேண்டும்.<br>**ந.க.எண்.3298 /2020 /ஜி1** |
| **2407)** | பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.**8,** பிளாக எண்.**15,** நகரளவு எண்கள் **3** மற்றும் **5** பகுதிகளில் ரத்தின சபாபதிபுரம் மனைப்பிரிவில் உள்ள பூங்கா இடத்தை பாதுகாக்கும் பொருட்டு தடுப்புச் |

சுவருடன், பெயர் பலகை அமைக்க வேண்டியுள்ளது. இப்பணிக்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.50,000/—த்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு நகராட்சி விதிகள் 1920 பிரிவு 15ன் கீழ் பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே உள்ளூரில் விலைப்புள்ளி கோரி இப்பணியை உடனடியாக செய்து முடிக்க வேண்டியுள்ளதால் உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. விலைப்புள்ளிகள் விவரம் கீழ்க்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.R.சுப்பிரமணியம்,<br>103, நல்லப்பா நகர்,<br>மகாலிங்கபுரம்,<br>பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலையை விட 0.16% குறைவு |
| 2. | திருவாளர்கள். தண்டபாணி அன் கோ,<br>11/31, தந்தை பெரியார் வீதி,<br>பல்லடம் ரோடு,<br>பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலையை விட 0.70%அதிகம் |
| 3. | திரு.A. சதீஸ்குமார்,<br>9/2, மதுரைவீரன் கோவில் வீதி,<br>டி.கோட்டாம்பட்டி,<br>பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலையை விட 0.71%அதிகம் |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் மற்ற விலைப்புள்ளிகளை விட குறைவாகவும் மதிப்பீட்டு விலையை விட 0.16% குறைவாகவும் விலைப்புள்ளி அளித்துள்ள திரு.R.சுப்பிரமணியம், அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டு, பணிகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920—பிரிவு 15ன் கீழ் தனி அலுவலரின் அனுமதி பெற்று பணிகளை செய்ய மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண்.3298/2020/இ1**